**திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அ.வ.எண்: 32/2019**

**வா.சா.1**

**நாள்: 06.01.2023**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவி என்கிற கோவிந்தராஜ் | | |
| தந்தை பெயர் | அய்யம்பெருமாள் | | |
| கிராமம் | செந்தலை | தொழில் | விவசாய கூலி |
| வட்டம் | திருவையாறு | வயது | 53 ஆண்டுகள் |

**வா.சா.1: முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி . எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இவர் மூலம் கீழ்காணும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1) 30.08.2013 தேதியிட்ட திருவையாறு வட்டாட்சியர் கிராமங்களில் வீட்டு மனைகளை ஒப்படைவு செய்வது விசயமாய் பிறப்பிக்கப்படும் உத்தரவின் வரைபடத்துடன் கூடிய நமுனா அசல். வா.சா.ஆ.1.

2) மன்னார்சமுத்திரம் பட்டா எண் 253 க்குரிய நத்தம் நிலவரி திட்ட துாய சிட்டா சான்றிட்ட நகல். வா.சா.ஆ.2.

3) தாவா இடத்தை அளக்க திருவையாறு பாரத வங்கியில் பணம் செலுத்தியதற்கான சலான் நகல். வா.சா.ஆ.3.

4) வாதி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனு அலுவலக நகல். வா.சா.ஆ.4

5) மேற்படி மனுவிற்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வழங்கப்பட்ட ஒப்புதல் ரசீது நகல். வா.சா.ஆ.5.

6) 04.09.2018 தேதியிட்ட நடுக்காவேரி குறுவட்ட அளவர் அனுப்பிய தகவல் அறிக்கை நகல். வா.சா.ஆ.6.

7) வாதி திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு அலுவலக நகல். வா.சா.ஆ.7.

8) 19.08.2010 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல். வா.சா.ஆ.8.

9) 23.02.2018 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல். வா.சா.ஆ.9.

10) 15.02.2019 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல். வா.சா.ஆ.10.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.